**நவம்பர் – 28**

# TNPSC துளிகள்

- ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தாலுக்காவில் உள்ள ஜெயராமபுரத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லனின் சிலையுடன் புதிதாக கட்டமைக்கப்பட்ட நினைவு மண்டபத்தை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
    - தீரன் சின்னமலையின் தளபதியாக இருந்த அவர் பிரிட்டிஷ் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- இந்திய இரயில்வே நிர்வாகமானது, 2025-26 ஆம் நிதியாண்டில் 1 பில்லியன் டன் சரக்கு ஏற்றுதலைக் கடந்து, நிலக்கரி, இரும்புத் தாது மற்றும் சிமெண்ட் ஆகியன அதிக பங்களிப்பைக் கொண்டு 1,020 மில்லியன் டன்களை எட்டியுள்ளது.
- சீன தைபேயில் நடைபெறும் 2025 ஆம் ஆண்டு ஆசியாவிற்கான உலகத் திறன்கள் போட்டிகளுக்கான தனது முதல் அணியை இந்தியா அனுப்புகிறது.
- இந்தியாவிற்கும் நேபாளத்திற்கும் இடையிலான 19வது SURYAKIRAN கூட்டு இராணுவப் பயிற்சியானது உத்தரகாண்டின் பித்தோராகரில் தொடங்கியது.
- பன்னாட்டுப் மெத்தம்பேட்டமைன் கடத்தல் வலையமைப்பைத் தடுக்க போதைப் பொருள் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் டெல்லிக் காவல்துறையினரின் கூட்டு நடவடிக்கையாக கிரிஸ்டல் ஃபோர்ட்ரஸ் நடவடிக்கை நடத்தப்பட்டது.
- நிதியியல் மற்றும் டிஜிட்டல் தளங்களில் அதன் பயன்பாட்டை தரப்படுத்துவதற்காக ஓமன் மத்திய வங்கி (CBO) ஓமன் ரியால் மதிப்பிற்கு (OMR) ஓர் அதிகாரப்பூர்வச் சின்னத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 2026 ஆம் ஆண்டின் சர்வதேச டென்னிஸ் புகழ் மன்றத்தில் இடம் பெறச் செய்வதற்கு ரோஜர் பெடரர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- தனது அறுபது ஆண்டு கால திரைத்துறை வாழ்க்கைக்குப் பிறகு 300க்கும் மேற்பட்ட படங்களில் நடித்த மூத்த பாலிவுட் நடிகர் தர்மேந்திரா மும்பையில் அவரது 89வது வயதில் காலமானார்.
- தேசியக் கணக்குகளின் தொகுப்புகளை தொகுப்பதில் வழிமுறை மேம்பாடுகள் குறித்த விவாத அறிக்கையினை புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகம் (MoSPI) வெளியிட்டது.
    - 2022-23 ஆம் நிதியாண்டை அடிப்படை ஆண்டாகப் பயன்படுத்தும் தேசிய கணக்குகளின் புதிய தொடர் ஆனது, 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 27 ஆம் தேதியன்று வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டின் U-Turn மனிதர்

- தேனியைச் சேர்ந்த கட்டிடப் பொறியாளர் G. மனுநீதி, 'U-Turn/U வளைவு மனிதர்' என்று பரவலாக அறியப்படுகிறார்.
- தடையற்றப் போக்குவரத்து இயக்கத்தினைச் செயல்படுத்துவதற்கு எளிய, குறைந்த விலையிலான போக்குவரத்து பொறியியல் தீர்வுகளை அவர் அறிமுகப்படுத்தினார்.
- வழக்கமானச் சந்திப்பு முனைகளை மூடி, திரும்பு முனைப் பகுதிகளை 100 மீட்டர் தொலைவில் நிறுவுவதன் மூலம் அவர் U வளைவு மாதிரியை உருவாக்கினார்.

- அவரது போக்குவரத்து கண்டுபிடிப்புகள் தமிழ்நாடு முழுவதும் பல போக்குவரத்து சமிக்ஞை இல்லாத வழித் தடங்களை உருவாக்கியது.




# தேசியச் செய்திகள்

## பவன் தியாகிகளுக்கு முதல் அதிகாரப்பூர்வ அஞ்சலி




- இந்திய இராணுவமானது, 38 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக பவன் நடவடிக்கையில் உயிரிழந்த தியாகிகளை அதிகாரப்பூர்வமாக நினைவு கூர்கிறது.
- ஆபரேஷன் பவன் என்பது சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவின் முதல் முக்கிய வெளிநாட்டு இராணுவ நடவடிக்கையாகும் என்பதோடு இது 1987 முதல் 1990 ஆம் ஆண்டு வரை இலங்கையில் நடத்தப்பட்டது.
- இந்தோ-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) உள்ளிட்ட போராளிக் குழுக்களின் ஆயுத நீக்கத்தினை இது நோக்கமாகக் கொண்டது.
- இதில் 1,171 இந்திய வீரர்கள் கொல்லப்பட்டனர் என்பதோடு 3,500க்கும் மேற்பட்டோர் இதில் காயமடைந்தனர் என்ற நிலையில் இது வெளிநாடுகளில் இந்தியாவின் மிகப்

பெரிய போர்க்கால இழப்புகளில் ஒன்றாகும்.

- ❖ மேஜர் இராமசாமி பரமேஸ்வரன் 1987 ஆம் ஆண்டில் அவரது துணிச்சலுக்காக பரம் வீர் சக்ரா விருதைப் பெற்றார்.
- ❖ புது டெல்லியில் உள்ள தேசியப் போர் நினைவிடத்தில் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப் படும்.

## இந்தியாவின் நீதித்துறை AI கட்டமைப்பு





- ❖ நீதித்துறை அமைப்பில் செயற்கை நுண்ணறிவு எவ்வாறு உதவ முடியும் என்பது குறித்த வெள்ளை அறிக்கையை இந்திய உச்ச நீதிமன்றம் வெளியிட்டது.
- ❖ வழக்கு மேலாண்மை, சட்ட ஆராய்ச்சி மற்றும் நீதிமன்றங்களில் தாமதங்களைக் குறைப்பதற்கு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு உதவ முடியும் என்பதை இது விளக்குகிறது.
- ❖ SUPACE (உச்ச நீதிமன்றத்தின் செயல்திறன் உதவிக்கான உச்ச நீதிமன்ற வலை தளம்), SUVAS (உச்ச நீதிமன்ற விதிக் அனுவாத் மென்பொருள்), TERES (மின்னணு பதிவு மற்றும் உரையின் படியெடுத்தல்) மற்றும் LegRAA (சட்ட ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு உதவி) போன்ற கருவிகள் இந்தியாவின் முக்கிய நீதித்துறை செயற்கை நுண்ணறிவு அமைப்புகளாகச் செயல்படுகின்றன.
- ❖ தவறான வெளியீடுகள், தரவுத் தனியுரிமைச் சிக்கல்கள் மற்றும் சார்பு மிக்க வழி முறைகள் போன்ற அபாயங்கள் குறித்தும் இந்த ஆய்வறிக்கை எச்சரிக்கிறது.
- ❖ நீதிபதிகள் இறுதி முடிவெடுப்பவர்களாக இருப்பதை உறுதி செய்யவும், நீதிமன்றங்களில் செயற்கை நுண்ணறிவு பொறுப்புடன் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யவும் இது விதிகளை அமைக்கிறது.

## சிறார் நீதி வாரியங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள்

- ❖ 362 சிறார் நீதி வாரியங்களில் (JJBs) உள்ள வழக்குகளில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்டவை 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதி நிலவரப்படி நிலுவையில் உள்ளன.
- ❖ 765 மாவட்டங்களுள் சுமார் 92% மாவட்டங்களில் சிறார் நீதி வாரியங்கள் அமைக்கப் பட்டுள்ளன ஆனால் 24% வாரியங்களில் முழுமையாகப் பணியாளர்கள் இல்லை என்ற நிலையில் 30% வாரியங்களில் இணைக்கப்பட்ட சட்ட உதவி பெறும் மையங்கள் இல்லை.
- ❖ JJBகளில் தாக்கல் செய்யப்பட்ட 1,00,904 வழக்குகளில் பாதிக்கும் குறைவானவை 2023

ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் தீர்க்கப்பட்டன.

- ஒவ்வொரு JJB வாரியத்திலும், காலியிடங்கள், போதுமான நிதி இல்லாதது மற்றும் பலவீனமான தரவுக் கண்காணிப்பு, அதிகரித்து வரும் பணிச்சுமை ஆகியவற்றுடன் ஆண்டுதோறும் சராசரியாக 154 வழக்குகள் இங்கு நிலுவையில் உள்ளன.
- இந்திய நீதி அறிக்கை (IJR) ஆய்வில் ஒழுங்கற்ற பொதுத் தரவுப் பரிமாற்றம், மோசமான நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் குழந்தைகளை மையமாகக் கொண்ட சேவை வழங்கலில் இடைவெளிகள் ஆகியன கண்டறியப்பட்டன.
- 2023 ஆம் ஆண்டில், இந்தியத் தண்டனைச் சட்டம் மற்றும் சிறப்புச் சட்டங்களின் கீழ் 31,365 வழக்குகளில் 40,036 சிறார் கைது செய்யப்பட்டனர்.
- இந்தச் சிறார்களில் சுமார் 75 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் 16 முதல் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர்.
- ஒடிசாவில் மிக அதிகபட்சமாக 83% வழக்குகள் நிலுவையில் உள்ளன அதே நேரத்தில் கர்நாடகாவில் மிகக் குறைவாக 35% வழக்குகள் நிலுவையில் உள்ளன.
- JJB செயல்பாடுகள் குறித்தத் தரவுகளைச் சேகரிக்க 21 மாநிலங்களில் 250க்கும் மேற்பட்ட தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகளை IJR தாக்கல் செய்தது என்ற நிலையில் இது மையப்படுத்தப் பட்ட ஒரு கண்காணிப்பு இல்லாததை எடுத்துக் காட்டுகிறது.




# சர்வதேசச் செய்திகள்

## உக்ரைனில் முதல் நேரடி அலைபேசி செயற்கைக் கோள் தொடர்பு சேவை

- ஸ்டார்லிங் நிறுவனத்தின் நேரடி அலைபேசி செயற்கைக் கோள் தொடர்பு சேவையை செயல்படுத்திய முதல் ஐரோப்பிய நாடு உக்ரைன் ஆகும்.
- இந்தச் சேவை கெய்வ்ஸ்டார் மற்றும் உலகளாவிய தொலைத்தொடர்பு குழுவான வீன் இடையேயான கூட்டாண்மை மூலம் தொடங்கப்பட்டது.
- இது SMS சேவையுடன் தொடங்கி 2026 ஆம் ஆண்டில் குரல் மற்றும் தரவு சேவை வரை விரிவடையும்.
- நேரடி அலைபேசி செயற்கைக் கோள் தொடர்பு தொழில்நுட்பம் நிலையான 4G திறன் பேசிகளை நிலத்தில் உள்ள அலைவாங்கி கோபுரங்களைத் தவிர்த்து நேரடியாக செயற்கைக் கோள்களுடன் இணைக்கிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## HAMMER ஆயுத அமைப்பு




- HAMMER என்பது பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் மற்றும் பிரான்சில் உள்ள சஃப்ரான் நிறுவனம் ஆகியவை இணைந்து இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு துல்லியமான வழி காட்டப்பட்ட வானிலிருந்து நிலம் மீது ஏவப்படும் ஆயுதமாகும்.
- ஹேமர் என்பது விரைந்து செயல்படுகின்ற நவீன நெடுந்தூர வெடிமருந்து தாக்குதல் வரம்பு என்பதைக் குறிக்கிறது.
- இது மிக கடினமான இலக்குகளைத் துல்லியமாகத் தாக்க ஒரு நவீன வழிகாட்டுதல் அமைப்பை GPS INS (புவியிடங்காட்டி அமைப்பு செயலாற்ற வழிச்செலுத்துதல் அமைப்பு), அகச்சிவப்பு அல்லது சீரொளிக் கற்றையைப் பயன்படுத்துகிறது.
- இது தாக்குதலுக்கான தொடக்க வரம்பிலிருந்து சுமார் 70 கிலோமீட்டர் வரையிலான இலக்குகளைத் தாக்கும்.
- இது ரஃபேல் விமானங்களில் பயன்படுத்தப்படுகிறது என்ற நிலையில் மேலும் இதனை LCA தேஜாஸ் விமானங்களில் பொருத்திப் பயன்படுத்த இயலும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## அண்டார்டிக் ஓசோன் துளை 2025





- 2025 ஆம் ஆண்டில் அண்டார்டிக் ஓசோன் துளையானது, 1992 ஆம் ஆண்டு முதல் 5வது மிகவும் சிறிய துளையாக இருந்தது என்று நாசா மற்றும் தேசியப் பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் (NOAA) தெரிவித்துள்ளது.
- செப்டம்பர் மாதத்தின் தொடக்கத்தில் அதன் மிகப்பெரிய அளவு 8.83 மில்லியன் சதுர மைல்கள் ஆகும் என்ற நிலையில் இது 2006 ஆம் ஆண்டில் பதிவான அளவை விட 30% சிறியது ஆகும்.
- ஓசோன் துளை என்பது ஓசோன் அளவு 220 டாப்சன் அலகுகளுக்குக் கீழே குறைகின்ற படை அடுக்கு மண்டலத்தில் உள்ள ஒரு பகுதியாகும்.
- மாண்ட்ரியல் நெறிமுறை (1992) ஆனது CFC (குளோரோஃப்ளூரோகார்பன்கள்) போன்ற தீங்கு விளைவிக்கும் இரசாயனங்களைக் குறைத்து, ஓசோன் அடுக்கை மீளச் செய்ய உதவுகிறது.
- வெப்பநிலை மற்றும் காற்று சுழற்சி போன்ற வானிலைக் காரணிகளும் 2025 ஆம் ஆண்டில் ஓசோன் துளையை குறைக்க உதவியது.

## நிங்கலூ பவளப்பாறை

- யுனெஸ்கோவால் பட்டியலிடப்பட்ட மேற்கு ஆஸ்திரேலியாவின் நிங்கலூ பவளப் பாறையில் சுமார் 70% பவளப்பாறைகள் அழிந்து விட்டன.
- ஆஸ்திரேலியாவின் மிகவும் நீளமான மற்றும் மிகவும் தீவிரமான கடல் சார் வெப்ப அலையால் இந்த இழப்பு ஏற்படுகிறது.

- வடக்கு காயல் (லகூன்) தளங்களில் எட்டு தளங்களில் பவளப் பாறைகளின் தற்போது 60 சதவீதத்தினைத் தாண்டியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கணக்கிடப்பட்ட 1,600 பவளப்பாறைகளில், 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சுமார் 600 மட்டுமே மீண்டன.
- வெரோனின் டியுப் பவளப்பாறை மற்றும் லெசர் நாப் பவளப்பாறை போன்ற சில மீள் தன்மை கொண்ட இனங்கள் இங்கு உயிர் பிழைத்தன ஆனால் ஸ்டாக்ஹார்ன் பவளப் பாறைகள் மற்றும் மெல்லிய பர்டுநெஸ்ட் பவளப்பாறைகள் போன்ற அதிகளவில் காணப் படும் இனங்கள் அழிந்தன.
- பவளப்பாறைகள் உலகளவில் உள்ள கடல் உயிரினங்களில் மூன்றில் ஒரு பங்கிற்கு ஆதரிக்கின்றன எனவே அவற்றின் பெருமளவிலான அழிவு ஒட்டு மொத்த கடல் சார் பல்லுயிரியலை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குகிறது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## 2025 ஆம் ஆண்டில் உலகின் மிகவும் விலையுயர்ந்த தெருக்கள்

| Rank (2025) | Retail Street | City, Country |
|---|---|---|
| 1 | **New Bond Street** | **London, U.K.** |
| 2 | Via Montenapoleone | Milan, Italy |
| 3 | Upper Fifth Avenue | New York City, U.S. |
| 4 | Tsim Sha Tsui | Hong Kong, Greater China |
| 5 | Avenue des Champs-Élysées | Paris, France |
| 6 | Ginza | Tokyo, Japan |
| 7 | Bahnhofstrasse | Zurich, Switzerland |
| 8 | Pitt Street Mall | Sydney, Australia |
| 9 | Myeongdong | Seoul, South Korea |
| 10 | Kohlmarkt | Vienna, Austria |
| ... | ... | ... |
| 24 | **Khan Market** | **New Delhi, India** |

- 2025 ஆம் ஆண்டில் இலண்டன் உலகின் மிகவும் விலையுயர்ந்த சில்லறை விற்பனை இடமாக மாறியது.

- குஷ்மேன் மற்றும் வேக்ஃபீல்ட் (C மற்றும் W) அறிக்கையின்படி உலகளாவிய அதிக தெருக்கடைகளின் வாடகை 4.2% அதிகரித்தன.
- மிலனில் உள்ள வியா மான்டெனாபோலியோன் மற்றும் நியூயார்க்கில் உள்ள மேல் மட்ட ஐந்தாவது நிழற்சாலை இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பிடித்தன.
- ஹாங்காங்கில் உள்ள சிம் ஷா சூய், டோக்கியோவில் உள்ள கின்சா மற்றும் சியோலில் உள்ள மியோங்டாங் ஆகிய மூன்று ஆசிய வீதிகள் முதல் பத்து இடங்களில் இருந்தன.
- புது டெல்லியில் உள்ள கான் சந்தை சதுர அடிக்கு 223 அமெரிக்க டாலர்கள் என்ற ஆண்டு வாடகை மற்றும் 3% வளர்ச்சியுடன் 24வது இடத்தைப் பிடித்தது.
- 2025 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் 8% என்ற மிகவும் உயர்ந்த பிராந்திய வாடகை வளர்ச்சி என்பது பதிவானது.

# மாநிலச் செய்திகள்

## முதல் சுண்ணாம்புக்கல் கனிமத் தொகுதி ஏலம்




- சுண்ணாம்புக்கல் கனிமத் தொகுதிகளின் முதல் ஏலம் ஜம்மு மற்றும் காஷ்மீரில் நடைபெற உள்ளது.
- அனந்த்நாக், ரஜோரி மற்றும் பூஞ்ச் மாவட்டங்களில் சுமார் 314 ஹெக்டேர் பரப்பளவில் ஏழு சுண்ணாம்புக் கல் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- இந்த ஏலம் 2015 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் கீழான சுரங்கச் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாகும்.
- இந்தத் தொகுதிகள் UNFC (ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு வகைப்பாடு) G3 மற்றும் G4 ஆய்வு நிலைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- இந்தத் தொகுதிகளிலிருந்து பெறப்படும் உயர்தரமான சுண்ணாம்புக் கல் சிமெண்ட் உற்பத்தி, கட்டுமானம் மற்றும் பிற தொழில்துறைகளை ஆதரிக்கும்.
- இந்த ஒன்றியப் பிரதேசத்தில் வெளிப்படைத் தன்மை, நிலையான சுரங்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதே இந்த ஏலத்தின் நோக்கமாகும்.

# விளையாட்டுச் செய்திகள்

## உலகக் குத்துச்சண்டை கோப்பை இறுதிப் போட்டிகள் 2025

- உலகக் குத்துச்சண்டை கோப்பையின் இறுதிப் போட்டிகள் 2025 ஆனது உத்தரப் பிரதேச மாநிலத்தின் கிரேட்டர் நொய்டாவில் நடைபெற்றது.
- இந்தப் போட்டியை உலகக் குத்துச்சண்டை அமைப்புடன் இணைந்து இந்திய குத்துச்

சண்டை கூட்டமைப்பு (BFI) ஏற்பாடு செய்தது.

- இந்தியா ஒன்பது தங்கம், ஆறு வெள்ளி மற்றும் ஐந்து வெண்கலம் உட்பட மொத்தம் 20 பதக்கங்களை வென்றது.
- 2025 ஆம் ஆண்டு உலகக் குத்துச்சண்டை கோப்பை போட்டித் தொடரில் இந்தியா 13 தங்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்தது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து இதில் கஜகஸ்தான் 12 தங்கங்களுடன் இரண்டாவது இடத்தில் இருந்தது.

World Boxing Cup Finals - Greater Noida 2025
Medal table - Top 10

| # | Country | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1. | INDIA | 9 | 6 | 5 | 20 |
| 2. | UZBEKISTAN | 4 | 5 | 4 | 13 |
| 3. | ENGLAND | 2 | 1 | 3 | 6 |
| 4. | CHINESE TAIPEI | 1 | 2 | 1 | 4 |
| 5. | KAZAKHSTAN | 1 | 1 | 6 | 8 |
| 6. | POLAND | 1 | 1 | 3 | 5 |
| 7. | JAPAN | 1 | 1 | 2 | 4 |
| 8. | AUSTRALIA | 1 | | 2 | 3 |
| 9. | ITALY | | 2 | | 2 |
| 10. | KYRGYZSTAN | | 1 | | 1 |

# முக்கிய தினங்கள்


## தேசிய மாணாக்கர் படை உருவாக்க தினம் 2025 - நவம்பர் 23




- இந்த நாள் நவம்பர் மாதத்தின் 4வது ஞாயிற்றுக்கிழமையன்று அனுசரிக்கப்படுகிறது.
- இந்திய இளையோர்களிடையே ஒழுக்கம், தலைமைத்துவம் மற்றும் தேசபக்தியை வளர்ப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது 1948 ஆம் ஆண்டு ஜூன் 15 ஆம் தேதியன்று அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்ட NCC படையின் 78 வது ஆண்டு நிறைவைக் குறித்தது.
- NCC என்பது பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் "ஒற்றுமை மற்றும் ஒழுக்கம்" என்ற முழக்கத்துடன் செயல்படுகிறது.
- 1948 ஆம் ஆண்டில் 20,000 வீரர்கள் உடன் தொடங்கிய NCC ஆனது 713 மாவட்டங்களில் 20 லட்சம் பிரிவுகளாக வளர்ந்துள்ளது.
- NCC கொடியின் மையத்தில் NCC சின்னத்துடன் சிவப்பு (இந்தியக் காலாட் படை), கருநீலம் (இந்தியக் கடற்படை), மற்றும் வெளிர் நீலம் (இந்திய விமானப் படை) ஆகிய வண்ணங்கள் உள்ளன.

## இந்திய அரசியலமைப்பு தினம் 2025 - நவம்பர் 26




- அரசியலமைப்பு தினம் / சம்விதான் திவாஸ் 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதியன்று இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப் பட்டதைக் குறிக்கும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.
- அரசியலமைப்பு ஆனது 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது இதனால் இந்தியா ஓர் இறையாண்மை கொண்ட குடியரசாக மாறியது.
- இந்திய அரசானது, 2015 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதியை அரசியலமைப்பு தினமாக அறிவித்தது.
- அனைத்துக் குடிமக்களிடையேயும் அரசியலமைப்பு உரிமைகள், கடமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்கள் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதே இந்த நாளின் நோக்கம் ஆகும்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, " Hamara Samvidhan – Hamara Swabhiman" ("Our Constitution – Our Pride") என்பதாகும்.

## தேசிய பால் தினம் 2025 - நவம்பர் 26

- வெள்ளைப் புரட்சியின் தந்தை டாக்டர் வர்கீஸ் குரியனைக் கௌரவிக்கும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- பாலின் ஊட்டச்சத்து மதிப்பு மற்றும் கிராமப்புற விவசாயிகளை ஆதரிப்பதில் பால் துறையின் பங்கு பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- இந்தியா உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தியாளராக மாற உதவிய ஃப்ளட் நடவடிக்கையில் (1970) டாக்டர் குரியனின் பணியை இது குறிக்கிறது.

- இந்தியா தற்போது உலகின் 22 சதவீதத்திற்கும் அதிகமான பாலினை உற்பத்தி செய்கிறது என்பதோடு பால் துறை இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.3% பங்களிக்கிறது.




# இதரச் செய்திகள்


## தணிக்கை திவாஸ் - நவம்பர் 16




- 5வது தணிக்கை திவாஸ் ஆனது 2025 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்டது.
- இது இந்தியாவின் பொதுக் கணக்கின் பாதுகாவலராக விளங்கும் தலைமைக் கணக்காளர் மற்றும் தணிக்கையாளரின் (CAG) பங்கை கௌரவிக்கிறது.
- இந்தியாவின் முதல் தலைமை தணிக்கையாளரான சர் எட்வர்ட் டிரம்மண்ட் 1860 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் தேதியன்று பொறுப்பேற்றார்.
- இந்தியாவின் தணிக்கை முறை 1858 ஆம் ஆண்டு கிழக்கிந்திய கம்பெனியின் கணக்குகளைச் சரி பார்க்கும் ஒரு துறையுடன் தொடங்கியது.
- 148வது சரத்தின் கீழான ஓர் அரசியலமைப்பு அமைப்பாக உள்ள தலைமை கணக்குத் தணிக்கையாளர் (CAG) அலுவலகம் மத்திய மற்றும் மாநில அரசின் கணக்குகளை தணிக்கை செய்கிறது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Guardian of the Public Purse" என்பது ஆகும்.
- இரண்டு புதியத் தணிக்கைக் குழுக்கள், மத்திய வருவாய் தணிக்கை (CRA) மற்றும் மத்திய செலவினத் தணிக்கை (CEA), 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று தொடங்கப் படும்.

## ஹயிலி குப்பி எரிமலை வெடிப்பு




- சுமார் 12,000 ஆண்டுகளாக செயலற்ற நிலையில் இருந்த எத்தியோப்பியாவின் ஹயிலி குப்பி எரிமலை சமீபத்தில் வெடித்தது.
- இந்த கேடய வகை எரிமலையானது, கிழக்கு ஆப்பிரிக்கப் பிளவு அமைப்பிற்குள் (EARS) உள்ள அஃபார் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது என்பதோடு இது கண்டத் தட்டுகள் (டெக்டோனிகல்) ரீதியாகச் செயல்படும் விலகும் கண்டத் தட்டு எல்லையாகும்.
- சாம்பல் புகையானது ஏமன், ஓமன், அரேபிய கடல் முழுவதும் பரவி, தற்போது மேற்கு இந்தியாவை நோக்கி நகர்வதால், இது விமானப் போக்குவரத்து மற்றும் வளிமண்டலம் சார்ந்த கவலைகளை எழுப்புகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★